Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.271/2021

**Depositions of PW- 6**

| Name | திரு. மேடையாண்டி | Occupation | Accountant |
|---|---|---|---|
| Father’s name | அங்குச்சாமி | Calling | |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of June 2026.

09.06.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் Accountant வேலை செய்து வருகிறேன். அசா.1 மற்றும் அசா.2 ஐ எனக்கு தெரியும். கடந்த 20.01.2021 அன்று மதியம் 03.30 மணியளவில் நான் சாப்பிடுவதற்காக எனது வீட்டிற்கு வந்தபோது அசா.1 ன் வீட்டின் கதவு திறந்திருப்பதாக என்னிடம் கூறினார். உடனே நானும் அவருடன் சென்று பார்த்தபோது அவரது வீட்டின் கதவுகள் திறந்திருந்தது. பீரோவும் திறந்திருந்தது. பீரோவில் 6 பவுன் நகை வைத்திருந்ததாகவும் அதை காணவில்லை என்றும் என்னிடம் கூறினார். பின்னர் நாங்கள் வீட்டில் வேறு எங்கும் மேற்படி நகைகள் உள்ளதா என்று தேடி பார்த்தோம். ஆனால் வீட்டில் எங்கும் இல்லை. அதன் பின்னர் அசா.1 ன் மகனான அசா.2 முத்துக்குமாருடன் சேர்ந்து நானும் திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்திற்கு புகார் கொடுப்பதற்கு சென்றோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. ஆனால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.271/2021

**Depositions of PW- 7**

| Name | திரு. கார்த்திக் | Occupation | கூலி வேலை |
|---|---|---|---|
| Father's name | ராமச்சந்திரன் | Calling | |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of June 2026.

<u>09.06.2026</u>

எதிரி ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 20.01.2021 அன்று இரவு சுமார் 08.00 மணியளவில் நானும் முத்துக்குமார் என்பவரும் சக்கரக்குளத்தெருவில் வந்து கொண்டிருந்தோம் அப்போது சமுத்திரம் என்பவர் வீட்டில் நகை திருடுபோய்விட்டதாக பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது போலீசார் அங்கு வந்து வரைபடம் வரைந்து எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். போலீசார் எங்களை விசாரித்தனர். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். **பார்வை மகஜர் அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. ஆனால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.